## உஸ்பெகிஸ்தான்



# தேவன் இருக்கிறார்

*ஆனால் நுழைவுத் தேர்வோ லஞ்சமோ இல்லாமல் அவளுக்கு இடம் கிடைத்தது.*

பள்ளிப்படிப்பை முடித்ததும், பிரபலக் கல்லூரியில் மருத்துவம் படிக்க விரும்பினாள் சோன்யா. ஆனால் அந்தக் கல்லூரியில் சேருவதற்கு, அதிக லஞ்சம் கொடுக்க வேண்டியிருந்தது.

சோன்யாவின் தாய்நாடான உஸ்பெகிஸ்தானில் இந்நாட்களில், கல்வி நிறுவனங்களில் சேருவதற்கு லஞ்சம் கொடுக்கவேண்டிய அவசியமில்லை. ஆனால் சோன்யா கல்லூரியில் சேர முயன்ற நாட்களில் சூழ்நிலை வித்தியாசமாக இருந்தது.

தான் அந்தக் கல்லூரியில் மருத்துவம் படிக்க விரும்புவதாக தன் அப்பாவிடம் சோன்யா சொன்னாள்.

“என்னால் லஞ்சம் கொடுக்க முடியாது” என்று அப்பா சொல்லிவிட்டார்.

ஆனாலும், அந்தக் கல்லூரியின் விண்ணப்பத்தை நிரப்பி, நம்பிக்கையோடு அதை அனுப்பிவைத்தாள்.

பள்ளிப்படிப்புக்கான பட்டமளிப்பு விழா வந்த சமயத்தில், தன் கனவுபற்றி உறவினர்கள், நண்பர்கள் மற்றும் ஆசிரியர்களிடம் பகிர்ந்து கொண்டாள். அவர்கள் எல்லாருமே “லஞ்சம் கொடுக்குமளவிற்கு பணம் சேர்த்துவிட்டாயா?” என்றுதான் கேட்டார்கள்.

சோன்யாவுக்கு கவலையாக இருந்தது. அப்பா நிச்சயம் லஞ்சம் கொடுக்கமட்டார் என்று தெரிந்தது. மேலும், அதற்கான பணமும் அவரிடம் இல்லை. உறவினர்கள் அல்லது நண்பர்களிடமிருந்து பணம் கடன் வாங்க அவர் விரும்பவும்

இல்லை. அவள் மருத்துவம் படிப்பதற்கு உதவி செய்யுமாறு தேவனிடம் ஜெபிக்க மட்டுமே செய்தார்.

பள்ளி ஆசிரியையாகப் பணியாற்றிவந்த அவளுடைய அம்மாவும் ஜெபித்துவந்தார்.

சோன்யாவுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. சிறுவயதிலிருந்தே பெற்றோருடன் சேர்ந்து செவந்த்-டே அட்வென்டிஸ்ட் சபைக்குத்தான் சென்றுகொண்டிருந்தாள்; ஆனாலும் தேவன் இருக்கிறார் என்கிற நம்பிக்கை அவளுக்கு இல்லை. ஜெபித்து, காத்திருந்தால் மட்டும் போதுமா?

அம்மாவுக்கு ஒரு யோசனை வந்தது.

“நீ அந்தக் கல்லூரியின் நுழைவுத்தேர்வுக்கு ஆயத்தமாகு; நாங்கள் உனக்காக தொடர்ந்து ஜெபிக்கிறோம்” என்று சொன்னார்.

சோன்யாவுக்கு ஆச்சரியமாக இருந்தது. அவளும் தன் பங்குக்கு ஜெபிக்கவேண்டும் என்று அம்மா சொன்னார். அவள் படிக்க ஆரம்பித்தாள். ஆனால் தேர்வு எப்போது என்று சரியாகத் தெரியவில்லை. கல்லூரி சேர்க்கைப் படிவங்களைப் பூர்த்தி செய்த சமயத்தில், தேர்வுக்கான தேதி அறிவிக்கப்பட வில்லை.

“பின்னர் தெரிவிக்கிறோம்’ என்று கல்லூரி அலுவலர் ஒருவர் சொன்னார்.

பள்ளிப்படிப்பு முடிந்த பிறகு, சோன்யா தொடர்ந்து தேர்வுக்காகப் படித்துவந்தாள். ஒரு மாதம் கடந்தது. இரண்டு மாதங்கள் கடந்தன. சோன்யா படித்து வந்த சமயத்தில் அவளது பெற்றோர் ஜெபித்து வந்தார்கள். கல்லூரியிலிருந்து யாரும் அழைக்கவில்லை.

இறுதியாக, கோடைக்காலத்தின் முடிவில், சோன்யா கல்லூரியைத் தொடர்புகொண்டு தேதி பற்றி விசாரித்தாள்.

“நீங்கள் கல்லூரிக்கு வந்து நேரடியாகத் தெரிந்துகொள்ளுங்கள்” என்று பேசினவர் கூறினார்.

காலையில் 10 மணிக்கு சோன்யாவும் அம்மாவும் கல்லூரிக்குச் சென்றார்கள். வாயிற்காவலர் அவர்களை நிறுத்தினார்.

“நுழைவுத்தேர்வுகள் எல்லாம் முடிந்து விட்டன” என்று சொன்னார்.

சோன்யாவுக்கு ஆச்சரியமாக இருந்தது. கோபம் வந்தது. சரியான நேரத்தில் விண்ணப்பத்தை அனுப்பி வைத்திருந்தாள்; ஆனால் தேர்வு தேதிபற்றி யாரும் அவளிடம் எதுவும் சொல்லவில்லை. நுழைவுத்தேர்வுக்காகப் படித்து கோடை விடுமுறைமுழுவதையும்வீணாக்கிவிட்டதாக நினைத்தாள்.

சோன்யா வருத்தப்பட்டதை அம்மா கவனித்தார்.

“நுழைவுத்தேர்வு முடிவுகள் வெளிவந்து விட்டனவா?” என்று அம்மா கேட்டார்.

“ஆம், அங்கு பாருங்கள், தேர்வில் தேர்ச்சிப் பெற்ற மாணவர்களின் பெயர்களைப் பார்க்கலாம்” என்று வாயிற்காவலர் சொன்னார்.

அம்மா போய்ப் பார்த்தார். பின்னால் சோன்யாவும் சென்றாள். அந்தப் பட்டியலைப் பார்த்தபோது, தன் பெயர் அங்கிருந்ததைக் கவ

னித்தாள் சோன்யா.

"எனக்கு இடம் கிடைத்துவிட்டது!" என்று ஆச்சரியத்தோடு சொன்னாள்.

எவ்வளவோ மாணவர்கள் விண்ணப்பம் செய்திருந்தார்கள்; ஆனால் நுழைவுத் தேர்வோ லஞ்சமோ இல்லாமல் அவளுக்கு இடம் கிடைத்தது.

தேவனைப் பற்றி இருந்த சந்தேகங்கள் எல்லாம் உடனடியாக மறைந்தன. கல்லூரி ஆரம்பிப்பதற்கு முன்னரே, சோன்யா தேவனை தன் இரட்சகராக ஏற்றுக்கொண்டு, ஞானஸ்நானம் பெற்றாள்.

"தேவன் உண்மையுள்ளவர் என்பதை அந்த அனுபவம் எனக்குக் கற்றுக்கொடுத்தது" என்று சொன்னாள்.

ஆனால் கதை அதோடு முடியவில்லை.

வகுப்புகள் ஆரம்பித்த பிறகு, கல்லூரியில் சேருவதற்கு எவ்வளவு பணம் கூடுதலாகக் கட்டியதாக சக மாணவர்கள் சோன்யாவிடம் கேட்டார்கள்.

"பணம் கட்டவில்லை, நான் நுழைவுத்தேர்வு கூட எழுதவில்லை" என்று சொன்னாள்.

"அப்படியானால் உனக்கு எப்படி இங்கு இடம் கிடைத்தது?" என்று திகைப்போடு கேட்டார்கள்.

"எனக்கு முக்கிய நபருடன் தொடர்பிருக்கிறது" என்றாள்.

பிறகு, மாணவர்கள் நன்றாகப் பழக ஆரம்பித்த பிறகுதான், சோன்யாவுக்குத் தெரிந்த முக்கிய நபர் தேவன் என்பதை மற்ற மாணவர்கள் புரிந்துகொண்டார்கள். அநேகர் அவளுடைய நம்பிக்கைகளைப் பற்றித் தெரிந்துகொள்ள விரும்பினார்கள். அங்கே வேத ஆராய்ச்சி குழு ஒன்றை சோன்யா ஆரம்பித்தாள். சகமாணவர்கள் மூன்று பேர் இயேசுவை தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்டு, ஞானஸ்நானம் பெற்றார்கள்.

இன்று, தன் விசுவாசத்தைப் பகிர்ந்துகொள்ள தனக்குக் கிடைக்கிற வாய்ப்புகளை எல்லாம் பயன்படுத்திக் கொள்கிறாள் சோன்யா.

"தேவன் உண்மையாகவே இருக்கிறார்" என்று சொன்னாள்.

இந்தக் காலாண்டின் பதின்மூன்றாம் வாரக் காணிக்கையின் ஒரு பகுதி, உஸ்பெகிஸ்தானின் டஸ்கென்டில் முதல் செவந்த்-டே அட்வென்டிஸ்ட் ஆரம்பப்பள்ளியை ஆரம்பிப்பதற்குப் பயன்படும். ஜூன் 29ம் தேதி, உதாரத்துவமாக காணிக்கை கொடுக்கத் தீர்மானித்திருப்பதற்கு நன்றி.

## கதைக் குறிப்புகள்

- முகநூலிலிருந்து புகைப்படங்களைப் பதிவிறக்க: bit.ly/fb-mq.
- யூரோ ஆசியா டிவிஷனிலிருந்து ஊழிய விவரங்களையும் துணுக்குகளையும் பதிவிறக்க: bit.ly/esd-2024.
- யூரோ–ஆசியா டிவிஷனின் வரைபடத்தில் உஸ்பெகிஸ்தான் நாட்டைக் காட்டவும்.